**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம் - 2021**

---

விஞ்ஞான மறற்ம் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3698 எஸ்ஆர்ஐ மற்றும் 3699 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுளள் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேறகொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் களனி பல்கலைக்கழகம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் என்பன செயற்திடட்த்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நாட்டின் உயர்கல்வி முறைமையில் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்ப பட்டப்படிப்புக்களுக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துவதே செயற்திடட்த்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 30,051.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,408.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. மிகுதி ரூபா 3,642.55 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஏப்ரல் 17 இல் முற்திகதியிடப்பட்ட நிதியளிப்பின் கீழ் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

---

எனது அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நிதி அறிக்கையின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களனி பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் என்பவற்றின் தளாடம் மற்றும் பொருத்துதல்கள், புத்தகம் மற்றும் மென்பொருள் என்பவற்றின் மீதி ரூபா 625.99 மில்லியன் தொகையாகும். எனினும் தொடர்புடைய பல்கலைக்கழக செயற்திட்ட அமுல்படுத்தல் அலகுகளினால் பராமரிக்கப்படும் நிலையான சொத்து பதிவேட்டின் படி சம்பந்தப்பட்ட சொத்துக்களின் தொடர்புடைய மீதி ரூபா 576.10 மில்லியன் தொகையாக காட்டப்பட்டுள்ளது. | முறையாக பதிலளிக்கப்படவில்லை | நிதக்கூற்றுக்களில் தொடர்புடைய மீதிகள் பொருத்தமான பல்கலைக்கழக பதிவேட்டுடன் காலத்துக்கு காலம் இணங்கச்செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் என்பவற்றின் தொடர்புடைய பல்கலைக்கழகங்களினால் பராமரிக்கப்படும் நிலையான சொத்து பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள தளாடம் மற்றும் பொருத்துதல்கள், புத்தகங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 476.53 மில்லியன் தொகையானது அத்திகதியில் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட சொத்துக்களின் தொடர்புடைய பெறுமதியான ரூபா 411.82 மில்லியன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | முறையாக பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தளபாடம் மற்றும் உபகரணம், புத்தகங்கள் மற்றும் கணனி மென்பொருள் என்பவற்றின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1,096.3 மில்லியன் தொகையானது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட விரிவாக பட்டியலப்படுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ள ரூபா 1,100.73 மில்லியன் தொகையுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 பாதுகாப்பு பொருட்களின் பெறுகையானது 2020 ஆம் ஆண்டின் நடைமுறைச் சொத்துக்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள துடன் நிதிக்கூற்றுக்களில் வேலை செயன்முன்னேற்றத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | தளபாடம் மற்றும் உபகரணம், புத்தகங்கள் மற்றும் கணனி மென்பொருள் என்பவற்றின் மீதிகள் பட்டியல்களுடன் உடன்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களிடமிருந்து கழிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 230.9 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டினது நிதிக்கூற்றுக்களில் நிறுத்திவைத்தலுக்காக 5 சதவீதம் ஏற்பாடொன்றை மேற்கொள்வதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | நிறுத்திவைத்தல் பணம் கணக்குகளுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பின்வரும் பெயர்களிலான 5 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

1. புதுமையான தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில்துறை தொடரப்பான கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்குதல்,
2. கைத்தொழில்துறை தேவை மற்றும் சர்வதேச நியமங்களுடன் சீரமைக்கப்பட்ட தரமான பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் கல்விசார் பணியாளர்களுக்கு உதவுதல்,
3. போட்டிக் கைத்தொழில் துறை மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக ஒத்துழைப்புத் திட்டத்தை வழங்குதல்,
4. இயலளவு அபிவிருத்தி வாய்ப்புக்கள், மற்றும்
5. 2021 ஆம் ஆண்டில் அங்ககீரத்திற்காக முன்மொழியப்பட்ட புதிய உயர் கல்வி செயற்திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்கத்தை ஆதரித்தல்

இதன்மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.2 செயற்றிட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| இல | கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக செயலாற்றல் | | நிதி செயலாற்றல் | | | |
| | | எதிர்பார்த்த செயலாற்றல் (மூ) | அடையப்பெற்ற செயலாற்றல் (மூ) | எதிர்பார்த்த செயலாற்றல் (மூ) | அடையப்பெற்ற செயலாற்றல் (மூ) | | |
| (அ) | ரஜரட்ட பலகலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 2.8 | 2.1 | 26.66 | 20 | கட்டுமான பணிகளின் செயலாற்றலை கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை கடுமையாக பாதித்த போதிலும் எதிர்பார்த்த பௌதீக மற்றும் நிதி செயலாற்றலை திருப்தியான மட்டத்தில் முகாமை செய்யக்கூடியதாக செயற்திட்டம் காணப்படுகின்றது. | தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கும் தொழிற்பாட்டு கிரயங்களை குறைப்பதற்காக உரிய நேரத்தில் கட்டுமான பணிகளை பூர்த்தி செய்வதனை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஶ்ரீ ஜயவர்த்தனபுர பலகலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 10 | 07 | 40.41 | 26.83 | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | சப்ரகமுவ பலகலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 56 | 40 | 46.84 | 41.64 | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | களனிய பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 68 | 43 | 45.9 | 45.71 | -மேற்படி- | -மேற்படி- |

### 3.3 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல | கூறு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | கைத்தொழில் கேள்வி மற்றும் சர்வதேச நியமங்களுடன் சீரமைக்கப்பட்ட தரமான பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் கல்விசார் பணியாளர்களுக்கு உதவுதல் | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் படி கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் 80 சதவீதமானவர்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை 2023 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், 2021 ஆம் ஆண்டு இறுதியில் இரு பல்கலைக்கழகங்களின் 11 கல்விசார் பணியாளர்கள் மாத்திரமே அவர்களின் பிஎச்டி புலமைப்பரிசு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்திருப்பதுடன் 03 கல்விசார் பணியாளர்கள் எம்எஸ்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்திருந்தனர். மேலும், ஒரு விரிவுரையாளர் ரூபா 1.98 மில்லியன் ஏற்பட்ட பின்னர் பிஎச்டி நிகழ்ச்சித்திட்டத்தை 2021 மார்ச் 20 இல் கைவிட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக 01 மில்லியன் மாத்திரமே மீளப்பெற்றுள்ளன. சம்மந்தப்பட்ட விரிவுரையாளரிடமிருந்து மிகுதி தொகையை மீளப்பெறுவதற்கு இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் கணக்காய்வு திகதியான 2022 ஏப்ரல் 30 வரையில் எடுக்கப்படவில்லை. | திருமதி. யாதன்வல என்பவரின் பல்கலைக்கழக நம்பிக்கை நிதியம் (யூபிஎவ்) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் என்பவற்றை மீட்ட பின்னர் மிகுதி தொகையை மீளளிக்க பல்கலைக்கழகம் உடன்பட்டுள்ளது. களனி பல்கலைக்கழகம் திருமதி. யாதன்வல என்பவரின் பல்கலைக்கழக நம்பிக்கை நிதியினை களனி பல்கலைக்கழகம் ஏற்கனவே மீட்டுள்ளது. பிஎம்யூ மூலம் மிகுதி தொகையை மீட்பதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செயற்திட்ட அங்கீகார ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கப்பட வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்ட விரிவுரையாளரிடமிருந்து மிகுதி தொகையை மீட்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | | ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கான நீண்டகால பயிற்சிற்காக ஏற்படுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் ஒதுக்கீட்டில், ஐ.அ.டொலர் 529.28 மில்லியன் மாத்தரிமே அதன்மீது செலவளிக்கப்பட்டுள்ளதுடன் ஒதுக்கீட்டின் 47.1 சதவீதம் பயன்படுத்தப்படாத தொகையாகும். மற்றும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கான | கொவிட் 19 தொற்றுப்பரவல் மூலம் நீண்ட கால பயிற்சி பாதிக்கப்பட்டதுடன் பயணத்தடைகள் காரணமாக விரிவுரையாளர்கள் வெளிநாட்டுக்கு செல்லக்கூடியதாகவும் இருக்கவில்லை. தற்போது, சலுகைகளை பல்வேறு விரிவுரையாளர்கள் பெற்றுள்ளதுடன் பயன்படுத்தப்படாத தொகையை பயன்படுத்தி | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஐ.அ.டொலர் 306 மில்லியன் தொகையில் ஐ.அ.டொலர் 173.1 மில்லியன் மாத்திரமே நீண்டகால பயிற்சிக்காக செலவளிக்கப்பட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒதுக்கீட்டின் 43.4 சதவீதம் பயன்படுத்தப்படாத தொகையாகும். | இவ்வாண்டினுள் அவர்களின் ீா.னு. மற்றும் ஆளுஉ நிகழ்ச்சித்திட்டங்களிற்காக செல்வார்கள். | |
| (இ) | தரம் மற்றும் கைத்தொழிலுடன் தொடர்புடைய உயர் தொழில்நுட்ப கல்வி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அமுல்படுத்தல். | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பலகலைக்கழகம் மாத்திரம் பங்குடமை நிறுவனங்களுடன் 02 ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் எவ்வித புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை. மேலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐ.அ.டொலர் 10 மில்லியன் பெறுமதியான மொத்த ஒதுக்கீட்டில் ஐ.அ.டொலர் 0.01 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டதுடன் மொத்த திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடுகளின் 99.9 சதவீதத்தினை பிரதிபலித்தது. | முன்மொழிவுகளிற்கான அழைப்பின் மூன்று சுற்றுக்கள் வெளியிடப்பட்டதுடன் முன்மொழிவுகளிற்கான அழைப்பின் முதல் மற்றும் இரண்டாம் சுற்றுக்காக 11 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டன. | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (இ) | | பெறுகை செயன்முன்னேற்ற அறிக்கையின் படி, இலக்கு பெறுகையின் ரூபா 531.5 மில்லியன் பெறுமதியில் 38 சதவீதம் பிரதிபலிக்கின்ற ரூபா 200.746 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட இலக்கின் 62 சதவீதம் பிரதிபலிக்கின்ற ரூபா 330.7 மில்லியன் தொகை களனி பல்கலைக்கழகத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. | முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் பூர்த்தியுடன் இவ்நடவடிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளன. | விநியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் மேற்பார்வை கண்காணிப்பின் மீது போதுமானதும் வினைத்திறனுமான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வழங்கப்பட்ட பெறுகையின் ரூபா 1,331 மில்லியன் பெறுமதியில், 51 சதவீதத்திற்கு சமனான ரூபா 673.6 மில்லியன் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. மேலும், இலக்கின் 49 சதவீதம் பிரதிபலிக்கின்ற ரூபா 657.5 மில்லியன் 2021 ஆம் ஆண்டில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதானமாக, பயன்படுத்தப்படாத 49 சதவீதம் ஆய்வக அபிவிருத்தி மற்றும் உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | விநியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் மேற்பார்வை கண்காணிப்பின் மீது போதுமானதும் வினைத்திறனுமான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | வழங்கப்பட்ட பெறுகையின் ரூபா 1,180.5 மில்லியன் தொகையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பலகலைக்கழகத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாகரூபா 468.5 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | பீடம் தற்போது தற்காலிக வளாகத்தில் இருப்பதற்கமைய தற்போதைய வளாகத்தல் உள்ள நிகழ்ச்சித்திட்டத்தை தற்போதைய மாணவர் உள்ளீர்ப்பிற்கு வழங்குவதற்கு பெறுகை கவனம் செலுத்துகின்றது. புதிய கட்டிட தொகுதியினை பூர்த்தியாக்குவதற்கும் மாணவர் உள்ளீர்ப்பை அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | ரூபா 1,951.4 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 608.5 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பெறுகை செயன்முன்னேற்றத்தின் 31 சதவீதம் அடையப்பெற்றுள்ளதனை இது குறிக்கின்றது. | 06 ஓசிபிஎஸ் (ளுடீ.ʼ.நு05இ15இ38இளுடீ.ʼ.கு 03இ08இ ரூ 09) 2021.12.30 இல் வழங்கப்பட்டு அவைகளின் பூர்த்தியானது 2022 ஆம் ஆண்டிலாகும். | -மேற்படி- |

## 3.4 செயற்திட்ட நடவடிக்கைகளினை ஆரம்பிப்பதில் காணப்பட்ட தாமதங்கள்

| இல | செயற்பாடுகள் | ஆரம்பிப்பதற்கு பட்டியிலிடப்பட்ட திகதி | ஆரம்பித்த திகதி | தாமதம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | ரஜரட்ட பலகலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 2019 ஒக்தோபர் | 25.10.2021 | 2 ஆண்டுகள் | ஏடிபி இல் வடிவமைப்பு மற்றும் கட்டுமான நிர்மானத்திற்கான நியம விலைமனு ஆவணங்கள் காணப்படாமை மற்றும் ஏடிபி இற்கு வடிவமைப்பு மற்றும் கட்டுமான நிர்மாணம் புதிய விடயமாக இருத்தல் என்பவை காரணமாக நியம விலை மனு ஆவணத்தை தயாரிப்பதற்கு குறித்த அளவான காலப்பகுதி இதற்கு எடுத்தது. எனினும், களனி, சப்ரகமுவ, ஸ்ரீ ஜயவர்த்தனபுர என்பவற்றின் மூன்று நிர்மாணங்களினை 2023 செப்தெம்பர் அளவிலும் ரஜரட்டயினை 2024 ஏப்ரல் அளவிலும் செயற்திட்ட கால எல்லையினுள்ளும் கடன் முடிவுத்திகதிக்கு முதலும் பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கும் தொழிற்பாட்டு கிரயங்களை குறைப்பதற்காக உரிய நேரத்தில் கட்டுமான பணிகளை பூர்த்தி செய்வதனை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பலகலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 2019 ஒக்தோபர் | 21.01.2021 | 1 ஆண்டு ரூ 3 மாதங்கள் | | |
| (இ) | சப்ரகமுவ பலகலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 2019 ஒக்தோபர் | 20.12.2020 | 1 ஆண்டு ரூ 2 மாதங்கள் | | |
| (ஈ) | களனி பலகலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிட நிர்மாணம். | 2019 ஒக்தோபர் | 02.09.2020 | 11 மாதங்கள் | | |

.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒட்டுமொத்த செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டத்தின் படி, ஆலோசகரினை தெரிவு செய்தல் நடைமுறை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், நான்கு பல்கலைக்கழகங்களின் நிர்மாணத்திற்கான ஆலோசனை சேவை நியமனம் ஒரு வருடம் தொடக்கம் இரு வருட காலப்பகுதி வரை தாமதமாக்கப்பட்டது. | ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ.அ.வ) மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இவ் ஒப்படைக்காக உள்நாட்டு ஆலோசகர்களுடன் வெளிநாட்டு ஆலோசகர்களை உள்ளடக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. | தாமதமாக்கப்பட்ட நடவடிக்கைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட முகாமைத்துவ ஆலோசகரை நியமிப்பதில் உள்ள ஆரம்ப தாமதம் காரணமாக, ரூபா 03 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் மூன்று மாத காலப்பகுதிக்காக தற்காலிக அடிப்படையில் நிர்மாண ஆலோசகராக மூன்று பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும், மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட மூன்று பொறியியலாளர்களுக்கும் ரூபா 8.39 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. பொறியியலாளர்களை தற்கால அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதிமுறைகளின் பிரிவின் இலக்கம் 14 இன் படி மூன்று மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். எனினும், மேற்படி மூன்று பொறியியலாளர்களும் ஏழு மாதங்களுக்கு மேலாக ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு ரூபா 5.39 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | பிஎம்சி இன் ஆட்சேர்ப்பினை கைவிட்ட பின்னர் பிஎம்யூ உள்நாட்டில் பிஎம்சிஎஸ் இனை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பெறுகையை ஆரம்பித்தது. அதே நேரத்தில் ரஜரட்ட பல்கலைக்கழகம் தவிர்ந்த மூன்று பல்கலைக்கழகங்களின் சிவில் நிர்மாணத்தின் வழங்கல் செயன்முறையும் வழங்கப்பட்டன. | செயற்திட்டத்தின் தொழிற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட முகாமைத்துவ ஆலோசகர்களை நியமிக்கும் வரை ஒரு மில்லியன் ஒதுக்கீட்டினுள் ஆறு மாத காலப்பகுதிக்காக கட்டிட கலைஞர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ரூபா 2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 04 பல்கலைக்கழகங்களுக்கான பீட கட்டிடத்தின் நிர்மாண பணிகளுக்காக ஆரம்ப பிரதான பணித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நான்கு ஒப்பந்தக்காரர்கள் பிரதான பணித்திட்டத்தை (எம்டபில்யூபி) சமர்ப்பித்துள்ளதுடன் ஒப்பந்த உடன்படிக்கைகளின் ஒரு பகுதியாக இது இருக்கின்றது. அவர்கள் திருத்திய பிரதான பணித்திட்டங்களை இடைவெளி ஆய்வின் பின்னர் மீள்சமர்ப்பித்தனர். பணியின் செயன்முன்னேற்றமும் எம்டபில்யூபி இற்கு எதிராக சரிபார்க்கப்பட்டது. | செயற்திட்டம் நிர்மாண பணிகளினை ஆரம்பிப்பதற்கு முன்பாக பிரதான பணித்திட்டத்தினை தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | இழப்பீட்டு நிபுணர் ஒருவர் ரூபா 3.5 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் நியமிக்கப்பட்டு 2021 ஒக்தோபர் 15 தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரை ரூபா 332,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | பொறியியல், கட்டுமான முகாமைத்துவம், செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் இழப்பீடுகளினை கையாளக்கூடிய முன்னைய அனுபவங்கள் மற்றும் பிரச்சனைகளை தீர்த்தல் என்பவற்றின் சம்பூரண அறிவைக்கொண்ட நபர் ஒருவர் தேவையற்ற கால நீடிப்பு அல்லது கொடுப்பனவு என்பவற்றை குறைத்துக்கொள்வதற்காக தரம் மற்றும் நேரம் என்பவைகளை பேணுவதன் மூலம் இழப்பீடுகளை நுணுக்கமாக கையாள்வதற்கு இவ் நான்கு பெரிய நிர்மான செயற்திட்டங்களுக்கு அவசியமானவராக இருக்கின்றார். | நிர்மாண ஆலோசகர் சம்பந்தப்பட்ட பணிகளினை உள்ளடக்கப்பட வேண்டும். |

### 3.6 குறைபயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறப்பட்ட ஐ.அ.டொலர் 145 மில்லியன் கடன் தொகையில், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 04 ஆண்டுகள் கடந்த பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக 19 சதவீதம் பிரதிபலிக்கின்ற ஐ.அ.டொலர் 27.87 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ரூபா 52.12 மில்லியனிறக்கு சமனான ஐ.அ.டொலர் 0.28 மில்லியன் பொறுப்புக்கட்டணமாக செலுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்ட நிர்வாக கையேட்டில் நிர்ணயிக்கப்பட்ட திருத்திய இலக்குகளின் படி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,261.72 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 36.23 மில்லியன் தொகையை பயன்படுத்த | கடன் ஒப்பந்தம் 2019.01.17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதுடன் கடன் செல்லுபடியாகும் திகதி 2019.04.04 ஆகும். விலைமனு ஆவணத்தின் படி வடிவமைப்பு மற்றும் மற்றும் கட்டுமான நிர்மாணம் என்பவற்றை இறுதியாக்குவதற்கு குறிப்பிட்டளவு கால அவகாசம் எடுத்தது, 2020 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதுடன் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்றும், | நிதிப்பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு செயற்திட்ட நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக சம்பந்தப்பட்ட இலக்குகளின் 76.9 சதவீதம் பிரதிபலிக்கின்ற ரூபா 5,585.32 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 27.87 மில்லியன் அடையப்பெற்றுள்ளது. மேலதிகமாக, இலக்கு வழங்கியதில் ரூபா 11,779 மில்லியன் ஏற்படுத்திய தொகையில், சிவில் பணிகளுக்கான ஒப்பந்தத்ததை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 2,667 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | இவ்வாண்டு இறுதியளவில் வழங்கிய இலக்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | |

### 3.7 புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| களனி, ரஜரட்ட, சப்ரகமுவ பல்கலைக்கழகங்களிற்காக கொவிட் 19 பாதுகாப்பு உபகரணம் மற்றும் பொருட்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 47.16 மில்லியன் செயற்திட்டத்திற்கு ஏற்பட்டது. எனினும், செயற்திட்ட நடவடிக்கை நோக்கெல்லையின் மேற்பார்வையின் கீழ் இவ்நடவடிக்கைகள் வராது. | தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம், பீசிஆர் இயந்திரம், நிகழ்நிலை மூலம் கற்பதற்கான ஒலி காட்சி உபகரணம் மற்றும் நிகழ்நிலை உயர் கல்விக்கான விடுதியின் வலைப்பின்னல் போன்ற கொவிட் 19 பதிலளிப்பு உருப்படிகளின் பெறுகைக்காக நோக்கெல்லையில் சிறிய மாற்றத்தினை ஏடிபி அங்கீகரித்தது. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களினை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன் செயற்திட்டத்தின் தொழிற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| களனி பல்கலைக்கழகத்தின் நிர்மாணத்தினது 05 சதவீத நிறுத்தி வைத்தலின் முந்திய எடுப்பனவிற்காக வரிசை அமைச்சின் பொது வைப்பு கணக்குகளுக்கு ரூபா 151.63 மில்லியன் வைப்பிடப்பட்டுள்ளதுடன் இத்தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு உண்மையில் செலுத்தப்படும் வரையில் ஆசிய அபிவிருத்தி வங்கி அந்த தொகையை வழங்குவதற்கு மறுத்துள்ளது. பொது வைப்பு கணக்கிற்கு பணம் அனுப்பியதற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 இல் கணக்குகளை மூடுவதற்கு முன் அமைச்சிடமிருந்து அவ் மீள்நிதியளிக்கப்பட்டதை பெறுவதற்காக வாக்கிலிருந்து இக்கிரயம் அறிவிடப்பட்டிருக்கவில்லை. | ஏடிபி வழிகாட்டலை கடைப்பிடிக்க வேண்டும். |

**3.9 முறைமை மற்றும் கட்டுப்பாடு**

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் படி 24 பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ரூபா 928.7 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் ஆண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டும். எனினும், குறிப்பிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக பூர்த்தியாக்கப்படவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் பரவல் நிலைமையினால் பல மாதங்களாக நாடு முடக்கப்பட்டிருந்தது. மேலும், இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக அனுப்பப்பட்ட பொருட்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதிலும் பெறுகை செயற்பாடுகளை பூர்த்தி செய்வதிலும் தாமதம் ஏற்பட்டது. | விநியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் மேற்பார்வை கண்காணிப்பின் மீது போதுமானதும் வினைத்திறனுமான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயன்முன்னேற்ற அறிக்கையின் படி நான்கு பல்கலைக்கழகங்கள் 2021 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 293.1 மில்லியன் பெறுமதியான 33 பெறுகை நடவடிக்கைகளை அமுல்படுத்தியுள்ளன. | வழக்கமாக செயல்நடவடிக்கை திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்படும். செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் நேரத்தில் இவ் நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டம் காலத்துக்கு காலம் திருத்தப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டினது நான்கு பல்கலைக்கழகங்களின் பெறுகை செயன்முன்னேற்றத்தின் படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 24.7 மில்லியன் மதிப்பிடப்பட்ட 20 பெறுகை நடவடிக்கைகள் பகுதியளவில் முடிவுறுத்தப்பட்டிருந்தன. | பொருட்கள் பகுதியளவில் பெறப்பட்ட மற்றும் ∴ அல்லது விநியோக காலப்பகுதிக்குள் விநியோகிக்கப்படாத போது உடன்படிக்கையின் பிரகாரம் இது பகுதியளவில் முடிவுறுத்தப்பட்டன. | பயனுறுதிமிக்க முறையில் பெறுகை செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |